# சீன-கனேடியர்களது வரலாறுகளின் தடமறிதல்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்


Tamil Canadian Centre for Civic Action

Chinese Canadian National Council Toronto Chapter


Ontario

## கனடாவில் பரந்த அளவிலான சீன குடியேற்றம்

- 1800 களின் நடுப்பகுதி முதல் பிற்பகுதி வரையில் ஆரம்பமானது
- பல குடியேற்றவாசிகள் சீன மக்கள் குடியரசில் உள்ள குவாங்டாங் (Guangdong) மாகாணம் அல்லது பேர்ல் ரிவர் டெல்டா (Pearl River Delta) பகுதியிலிருந்து வந்தவர்கள்.
- சீன குடியேற்றத்தின் ஆரம்ப நாட்களில், குடியேற்றவாசிகளில் பலர் வேலை தேடும் ஆண்களாக இருந்தனர். அவர்களில் பலர் சுரங்கம், வனவியல், போக்குவரத்து அல்லது அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்படும் தொழில்துறைகளில் தொழிலைப் பெற்றுக்கொண்டனர்.







அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்படும் துறைகளாக தங்கச் சுரங்கமும் கனேடிய பசுபிக் ரயில்வே துறையும் (CPR) இருந்தன. அவை சீனர் குடியேற்றத்தை ஊக்குவித்தன.

ஆரம்ப காலத்தில் புலம்பெயர்ந்தவர்களில் பலர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் குடியேறினர்.

**Content warning:** The following sections will detail instances of violence, discrimination, and death that impacted Chinese immigrants

# கனேடிய பசிபிக் இரயில்வேயின் (CPR) கட்டுமானம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario



CPR கட்டுமானத்தில் சீன தொழிலாளர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

- அவர்களின் உழைப்பு சீன கனேடியர்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பகுதியாகும்


CPR ஐ உருவாக்குவது மிகவும் ஆபத்தானது. ஆனாலும் ஒரு நாடாக கனடாவின் வளர்ச்சிக்கு அது அவசியமானது

## சீன தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டதன் காரணம்

- பசுபிக் பெருங்கடல் மூலம் சீன தொழிலாளர்களை பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு[1] கொண்டு வருவது எளிதாக இருந்தது.

- அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருந்தனர். என்றாலும், வெள்ளைத் தொழிலாளர்களைக் காட்டிலும் குறைந்த ஊதியம் பெற்றனர். அதாவது, அவர்களை வேலைக்கு அமர்த்துவது மலிவானதாகும்.[2]

ஆபத்தான பணிச்சூழல்கள், போதிய உணவின்மை, மருத்துவ உதவியின்மை, நோய்கள் காரணமாக பல தொழிலாளர்கள்[3] இறந்தனர்[4]



600-2,200




1. Government of Canada, 2022
2. Ibid.
3. Ibid.
4. Ibid.

# சீனத் தொழிலாளர்கள் தவிர்க்க முடியாத உழைப்பை வழங்கினர், ஆனால் கனடா அவர்களை எவ்வாறு நடத்தியது?

“ஆசியர்களுக்கு எதிரான இனவாதத்தை விளித்தல்” எனும் எமது வெளியீட்டில், அரசாங்கம், சீன வம்சாவளியினரை இலக்கு வைப்பதற்கு சட்டவாக்கத்தையும் ஏனைய வழிமுறைகளையும் பயன்படுத்தியமை பற்றி நாங்கள் பகிர்ந்துகொண்டோம்.

இந்த நடவடிக்கைகள் அவர்களது பொருளாதார ரீதியிலான வெற்றியைக் கட்டுப்படுத்தி, சீன மக்களை சமூக மற்றும் அரசியல் ஒருங்கிணைப்பிலிருந்து விலக்கியதுடன், கனடாவில் சீன சமூகத்தின் வளர்ச்சியைத் தடுக்க முயற்சித்தது.

## கனேடிய அரசாங்கம் சீன சமூகங்களுக்கு எதிராக ஏன் பாகுபாடு காட்டியது?








- சீன வம்சாவளியினரும் சீன சமூகங்களைச் சேர்ந்தவர்களும் கனடாவிற்கும் கனேடிய சமூகத்தின் நல்வாழ்விற்கும் 'அச்சுறுத்தலாக’ பார்க்கப்பட்டார்கள்.
  - சீன குடியேற்றவாசிகளை 'அச்சுறுத்தலானவர்கள்' என்று முத்திரை குத்துவதன் மூலம், வெள்ளை கனடியர்கள் கனடாவில் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் தொடர முடிந்தது.

உதாரணமாக, அனைத்து சீனர்களையும் 'நாகரிகம் குறைந்தவர்கள்’ எனவும் ‘ஆரோக்கியமற்றவர்கள்’ எனவும் முத்திரை குத்துவதன் மூலம், வெள்ளை கனேடியர்கள் 'உயர்ந்தவர்களாகவும்’ 'உண்மையான’ கனேடியர்களாகவும் கருதப்படலாம்.

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

# பாதுகாப்பான வெளிகளை உருவாக்குதல்

## Chinatowns- இல்



இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

- இனவாதம், பாகுபாடு காரணமாகவும் தொழில், வாழ்முறை ஏற்பாடுகள் தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாகவும் பெரும்பாலான சீன குடியேற்றவாசிகள் Chinatowns என அறியப்படும் 'சீனர்கள் மட்டும்' புழங்கும் இடங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டனர்.
- பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சில கட்டுப்பாடுகளின் படி, சீன வம்சாவளியினர் Chinatowns-இற்கு வெளியில் வசிக்கவோ சொத்துக்களில் முதலீடு செய்யவோ முடியாது.
- எவ்வாறாயினும், சீன கனேடியர்களின் நெகிழ்வுறுதியின் ஓர் அங்கமாக, Chinatowns பாதுகாப்பான இடங்களாக மாறின.

- அவர்கள் சீன மக்களை "அவர்களைச் சூழ்ந்திருந்த விரோதமும் இனவாதமும் கொண்ட சூழலில்" இருந்து தனிமைப்படுத்தினர்.[6]
- உணவு மற்றும் மரபுகள் உட்பட சீன கலாசார கூறுகளுக்கு சீன கனேடியர்கள் மரியாதை செலுத்த அனுமதிக்கும் கலாசார சூழல்களை அவர்கள் வளர்த்தெடுத்தனர்.



**இந்த சங்கங்கள் "தனிப்பட்ட மற்றும் சமூக நல சேவைகள், சமூக தொடர்பு, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது" போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றன.**[7]

இந்த பாதுகாப்பான இடங்களில், சீன சமூகங்கள் நெகிழ்வுறுதியையும் ஆற்றலையும் எதிர்ப்பாற்றலையும் வெளிப்படுத்தியுள்ளன!




5. Government of Canada, 2022
6. Chan, A. B., 2019
7. Ibid.

# சீன கனேடியர்களின் வரலாறுகளை அங்கீகரிப்பது ஏன் முக்கியமானது?

**சீன கனடியர்களின் வரலாறுகள் பாடசாலைகளில் முற்றுமுழுதாக கற்பிக்கப்படுவதில்லை**





சீன கனேடியர்களின் வரலாறுகளை நமது பாடத்திட்டத்தில் இருந்து விலக்கி வைப்பதன் மூலம் யாரை உண்மையான கனேடியர்கள் என அரசாங்கம் சொல்கிறது? வெள்ளையர்கள் அல்லாதோரின் பங்களிப்புகள் ஏன் புறக்கணிக்கப்படுகின்றன?

**புதிதாக புலம்பெயர்ந்தோர் பலருக்கு சீன கனேடியர்களின் பங்களிப்புகள், கடந்த கால அனுபவங்கள் (பாகுபாடு உட்பட) பற்றித் தெரியாது.**

- சீன கனேடியர்களின் வரலாறுகளைப் புரிந்துகொள்வது கடந்தகால அநீதிகளை தற்போதைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்த எம்மை அனுமதிக்கிறது
  - உதாரணமாக, COVID 19 ஐயும் புலம்பெயர்ந்த சீனர்கள்/ சீன சுற்றுலாப்பயணிகளையும் சுற்றி நிலவும் இனவாதத்துடன் கடந்த காலத்தில் சீனர்களை 'ஆரோக்கியமற்றவர்கள்' 'தாழ்ந்தவர்கள்' என ஒரே போக்காக கணித்ததை தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.
  - கனடாவில் இன்று யார் குடியேறலாம், குடியுரிமை நிலையைப் பெறலாம் என்பதை கட்டுப்படுத்த அரசாங்கத்தால் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டத்தையும் சீனர்களை விலக்கிய வரலாற்றையும் கூட நாம் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.
  - இன்று, பல சீனர்கள் குடியேற்ற அந்தஸ்தைப் பெறுவதில் இருந்து தொடர்ச்சியாக தடுக்கப்படுவதுடன், பலர் சுரண்டலுக்கு ஆளாகக்கூடிய வேலைத்தளங்களில் பணியாற்றுகின்றார்கள்.






**இந்த அநீதிகளின் வரலாற்று வேரைப் புரிந்து கொண்டால் தான் நீதிக்காகப் போராட முடியும்!**

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

# சீன கனேடிய வரலாறுகளை நாம் எவ்வாறு சிந்தித்துப் பார்க்க முடியும்?

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

உங்கள் பெற்றோரிடமும் குடும்ப உறுப்பினர்களிடமும் அவர்களின் புலம்பெயர்வு அனுபவத்தைப் பற்றி பேசுங்கள்

- பொருளாதார, சமூகம், அரசியல் உட்பட்ட தளங்களில் அவர்கள் எதிர்கொண்ட சிரமங்களை ஆராயுங்கள்
- அவர்களின் புலம்பெயர்வை ஊக்குவித்த காரணிகளைக் கவனியுங்கள்



உங்கள் நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் சகாக்களிடம் அவர்களது குடும்பம் கனடாவிற்கு புலம்பெயர்ந்த வரலாறு பற்றி பேசுங்கள்



வகுப்பில் வெள்ளையர் அல்லாத கனேடியர்களின் பங்களிப்புகளைப் பற்றி மேலும் பகிர்ந்துகொள்ளுமாறு உங்கள் ஆசிரியர்களிடம் கேளுங்கள்






**Image:** CCNCTO social justice student workshop about Chinese Canadian history

சீன கனடிய மரபைக் கொண்டாட உள்ளூரில் உள்ள சீன கனேடிய கலாசார மையங்கள், அருங்காட்சியகங்கள், கடைத்தொகுதிகளுக்கு விஜயம் செய்ய திட்டமிடுங்கள்.




- Chinese Canadian Cultural Centre of Greater Toronto in Scarborough, O.N.
- Ottawa Chinese-Canadian Heritage Centre in Ottawa, O.N.
- Chinese Canadian Museum in Vancouver, B.C.
- Chinese Canadian Museum - Victoria Exhibition in Victoria, B.C.

# Stay in touch with CCNCTO

இனவெறி
மற்றும்
வெறுப்புக்கு
எதிரான
ஆசிரியர்கள்


TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

Add us on **WeChat** or follow us on Instagram **@CCNCTO**

Check out our most recent **2021 anti-Asian racism report** and our **Frontline Workers Pandemic report**








Images: CCNCTO staff connecting with frontline Chinese workers

Fill out **this form** to join our volunteer team and support our various organizing, anti-racism, and equity work

# Works Cited


Chan, A. B. (2019). *Chinese Canadians*. Retrieved from https://www.thecanadianencyclopedia.ca/en/article/chinese-canadians

Government of Canada (2022). *Significant Events in History of Canadians of Asian Heritage*. Retrieved from https://www.canada.ca/en/canadian-heritage/campaigns/asian-heritage-month/important-events.html


இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario